## களம் தேர்வு – 08

1. பிழையற்ற தொடரைத் தேர்க.

1. செந்தமிழே உள்ளுயிரே செப்பறிய நின்பெருமை.

2. எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உறைவிரிக்கும்.

3. முந்தை தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்.

4. விந்தை நெடுநிலைப்பும் வேரார் புகழுரையும்.

(A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 3 மட்டும் (D) 4 மட்டும்

2. பொருத்தமான பொருளுடைய இணைகள் எத்தனை என காண்க.

1. விறகு - காய்ந்த கவை

2. சண்டு - காய்ந்த இலை

3. செம்மல் - பூ வாடிய நிலை

4. தேரைக்காய் - தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்

5. ஓடு - வன்மையானது

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

3. மணிவகையால் 'கூலம்' என்றழைக்கப்படும் தாவர வகையில் தவறானதைக் கண்டறிக.

(A) நெல் (B) புல் (C) கேழ்வரகு (D) கம்பு

4. கூற்று : வளர்தமிழ் என்பதன் இலக்கணக் குறிப்பு வினைத்தொகை.

காரணம் : காலம் கரந்த வினையெச்சமே வினைத்தொகை எனப்படும்.

(A) கூற்று - சரி ; காரணம் - தவறு
(B) கூற்று - தவறு ; காரணம் - சரி
(C) கூற்று - சரி ; காரணம் - சரி
(D) கூற்று - தவறு ; காரணம் - தவறு

5. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

(A) இரக்கம் கொள்ளும் கண்களை உடையவருக்கு.

(B) விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவருக்கு

(C) கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு

(D) பிற உயிர்களிடமும் அன்பு செலுத்துபவர்களுக்கு

6. பொருந்தாததைத் தேர்க.

(A) தோன்றி - றி
(B) செய்க - க
(C) நடந்தனன் - அன்
(D) அமைந்து - உ

7. வட்டார வழக்குச் சொற்களுக்கு இணையான சொற்களைத் தேர்க.

மகுளி, பாச்சல், கடிச்சு குடித்தல்

(A) சோற்றுக்கஞ்சி , பாய்தல் , மிளகாய் கடித்துக் குடித்தல்

(B) சோற்றுக்கஞ்சி , பாத்தி , மிளகாய் கடித்துக் குடித்தல்

(C) மேல் கஞ்சி , பாய்தல் , வாய்வைத்துக் குடித்தல்

(D) சோற்றுக் கஞ்சி , பாத்தி , வாய்வைத்துக் குடித்தல்.

8. மயங்கொலிச் சொற்களின் சொற்பொருளில் பொருந்தாததைத் தேர்க.

தொடு – தோடு

(A) தோட்டம் - பூ

(B) மருதநிலம் - தோல்

(C) வஞ்சகம் - இலை

(D) குளம் - பட்டை

9. சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடர் அமைக்க.

(A) எதிரியல்ல அறிவாற்றலின் மிகப்பெரிய அறியாமை

(B) அறிவாற்றல் அறியாமையின் மிகப்பெரிய எதிரியல்ல

(C) மிகப்பெரிய அறிவாற்றல் அறியாமையின் எதிரியல்ல.

(D) அறியாமை அறிவாற்றலின் மிகப்பெரிய எதிரியல்ல.

10. ஆராய்ந்து மாறுபட்ட இணையைக் காண்க.

1. முன்னிலை பன்மை - பெற்றீர்

2. தன்மை ஒருமை - வந்தோம்

3. அஃறிணை பலவின்பால் - ஓடா

4. படர்க்கை பலர்பால் - படித்தனர்

(A) 1 மட்டும் (B) 2 மட்டும் (C) 3 மட்டும் (D) 4 மட்டும்

11. கூற்று : கண்ணன் நேற்று வந்தான் – இது காலவழுவமைதி எனப்படும்.

காரணம் : இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும் இலக்கண ஆசிரியர்களால் பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

(A) கூற்று – சரி ; காரணம் – தவறு

(B) கூற்று – சரி ; காரணம் – சரி

(C) கூற்று – தவறு ; காரணம் – சரி

(D) கூற்று – தவறு ; காரணம் – தவறு

12. படர்க்கையை முன்னிலையாகவும், முன்னிலையைத் தன்மையாகவும், தன்மையைப் படர்க்கையாகவும் மாற்றுக.

அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

(A) நான் உன்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

(B) நீ அவனிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

(C) அவன் என்னிடமும் உன்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

(D) நீ என்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

13. சந்திப்பிழையுற்றத் தொடரைத் தேர்க.

(A) எல்லாப் பறவைகளுக்கும் செவித்துளைகள் இறகுகளால் மூடி இருக்கும்

(B) மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவிமடல் இருக்காது

(C) காகத்திற்குக்காது உண்டு. காது கேட்கும்.

(D) கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சி பெற்று இருக்கும்.

14. பொருத்துக.

| | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|
| a) Camel | -1) தொலை அளவியல் | (A) | 4 | 1 | 5 | 6 | 3 |
| b) Telemetry | -2) நெட்டுரு | (B) | 4 | 1 | 5 | 2 | 3 |
| c) Transact | -3) நீதிநூல் திரட்டு | (C) | 2 | 5 | 1 | 4 | 3 |
| d) Rote | -4) கயிறு | (D) | 2 | 1 | 5 | 6 | 3 |
| e) Didactic compilation | -5) செயல்படுத்துதல் | | | | | | |
| | -6) வேர் | | | | | | |

15. பொருந்தாததைத் தேர்க.

(A) ஓட (B) சொல்லிய (C) பார்க்காத (D) நடந்த

16. பிரித்தெழுதுக. ‘ தண்டலை ’

(A) தண்மை + அலை (B) தண்டு + அலை (C) தண்மை + தலை (D) தண்டு + தலை

17. பொருத்துக.

| | | | a | b | c |
|---|---|---|---|---|---|
| a) தனிவாக்கியம் | -1) எச்சவாக்கியமும் , முற்றுவாக்கியமும். | (A) | 2 | 3 | 1 |
| b) தொடர்வாக்கியம் | -2) பல எழுவாய் | (B) | 3 | 2 | 1 |
| c) கலவை வாக்கியம் | -3) பல பயனிலை | (C) | 1 | 2 | 3 |
| | | (D) | 3 | 1 | 2 |

18. யானையின் வேறு பெயர்களில் பொருந்தாதது எது?

(A) பூழ் (B) இருள் (C) அதவை (D) வாரிதி

19. சரியான நிறுத்தற் குறிகள் அமைந்த தொடரைத்தேர்க.

(A) நான் சொல்ல விரும்புவது “ உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்” என்பது தான்.

(B) நான் சொல்ல விரும்புவது , ” உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்” என்பது தான்.

(C) நான் சொல்ல விரும்புவது, “உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள் , உங்களால் எதையும் சாதிக்க இயலும்” என்பது தான்.

(D) நான் சொல்ல விரும்புவது , ‘ உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள். உங்களால் எதையும் சாதிக்க இயலும்’ என்பது தான் .

20. மரபுத்தொடரின் சரியான பொருளறிக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) மனக்கோட்டை | -1) தாமதித்து செய்தல் | (A) | 1 | 2 | 3 | 4 |
| b) கண்ணும் கருத்தும் | -2) அதிகமாக செலவு செய்தல் | (B) | 4 | 2 | 3 | 1 |
| c) அள்ளி இறைத்தல் | -3) தாய் குழந்தையைப் பேணுதல் | (C) | 2 | 3 | 4 | 1 |
| d) ஆறப்போடுதல் | -4) அமைச்சராக நினைத்தல் | (D) | 4 | 3 | 2 | 1 |

21. 'தருநிழல்' – என்ற சொல்லின் பதம் காண்க.

(A) குளிர்ந்தநிழல் (B) மரம்தந்தநிழல் (C) மரநிழல் (D) அதிகநிழல்

22. பொருத்துக.

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) உயிர்முதல் உயிரீறு | -1) கட்டை | (A) | 1 | 2 | 3 | 4 |
| b) உயிர்முதல் மெய்யீறு | -2) எருது | (B) | 3 | 2 | 1 | 4 |
| c) மெய்முதல் மெய்யீறு | -3) இராமன் | (C) | 2 | 3 | 4 | 1 |
| d) மெய்முதல் உயிரீறு | -4) சித்திரம் | (D) | 1 | 4 | 3 | 2 |

23. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள்.

பொருந்தாத இணையைக் காண்க.

1. ஞாபகம் - நினைவு
2. பத்திரிகை - நாளிதழ்
3. உற்சாகம் - பூரிப்பு
4. விசா - நுழைவு இசைவு
5. பாஸ்வோர்ட் - கடவுச்சீட்டு

(A) 2 மட்டும் (B) 3 மட்டும் (C) 4 மட்டும் (D) 5 மட்டும்

24. கோட்டையை 'க்வாட்' என்று அழைக்கும் திராவிட மொழி எது?

(A) தோடா (B) துளு (C) தெலுங்கு (D) கன்னடம்

25. தவறான தொடரைக் கண்டறிக.

(A) ஆ என்னும் எதிர்மறை இடைநிலைக்கு அடுத்து உயிர்மெய்வரின் கெடாமல் வரும்.

(B) அன் என்பது விகுதியாக வரும்போது அன் என்பதே சாரியையாக வரும்.

(C) சாரியைவர வேண்டிய இடத்தில் புள்ளி பெற்ற எழுத்து உயிர்ஏற இடமளித்து வந்தால் அதனை எழுத்துப்பேறு என்பர்.

(D) ஆன் , ஆள் , ஆர் ஆகிய விகுதிகள் வரும்போது அன் சாரியையாக வரும்.

26. ஜி.யு. போப் தமிழகத்தை அடைந்த ஆண்டு

(A) 1839 (B) 1833 (C) 1832 (D) 1830

27. பொருந்தாத இணைகள் எத்தனை என்பதைக் காண்க.

1. விழிச்சுடர் - உருவகம்
2. எண்ணவலை - உவமை
3. பசிக்கயிறு - உருவகம்
4. புருவவில் - உவமை
5. மலர்க்கை - உருவகம்

(A) 1 இணை (B) 2 இணை (C) 3 இணை (D) 4 இணை

28. ‘ கம்பர் யார்? ’ என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) கண்ணதாசன் (B) பாரதிதாசன் (C) சிதம்பரநாதர் (D) இராமலிங்கனார்

29. ‘ ரசிகர் ’ என்பதன் தமிழ்ச்சொல் காண்க.

(A) நேயர் (B) விசிறி (C) நண்பர் (D) தொடராளி

30. பொருத்துக.

| | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|
| a) கம்பலை | -1) உலோகங்கள் | (A) | 5 | 1 | 2 | 3 | 4 |
| b) கனிகள் | -2) குற்றம் | (B) | 4 | 3 | 2 | 5 | 6 |
| c) நவை | -3) செறிவு | (C) | 5 | 1 | 2 | 3 | 6 |
| d) உறழ் | -4) போர் | (D) | 2 | 5 | 3 | 1 | 4 |
| e) செறு | -5) உலகம் | | | | | | |
| | -6) வயல் | | | | | | |

31. எது / எவை தவறாக உள்ளது என காண்க.

1. Answer Book - பொதுக் குறிப்புச் சுவடி
2. Typhoid - குடற்காய்ச்சல்
3. Ointment - களிம்பு
4. Consumer - வாடிக்கையாளர்
5. Sub junior - மிக இளையோர்

(A) 1 , 3 தவறு (B) 3 , 5 தவறு (C) 1 , 4 தவறு (D) 2 , 4 தவறு

32. ஒரு சொல்லுக்கு வேறுபட்ட பொருள் கூறும் இடங்களில் பயன்படுத்தப்படும் நிறுத்தற்குறி எது?

(A) காற்புள்ளி (B) அரைப்புள்ளி (C) முக்காற்புள்ளி (D) முற்றுப்புள்ளி

33. வெற்பு, சிலம்பு, பொருப்பு, குன்று ஆகிய சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) அணிகலன் (B) மலை (C) மலைக்குகை (D) காடு

34. பொருத்துக.

| | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|
| a) Ethics | -1) பொறிப்பு | (A) | 5 | 4 | 1 | 3 | 2 |
| b) Combination | -2) அரசிதழ் | (B) | 5 | 6 | 1 | 2 | 3 |
| c) Inscription | -3) கருவூலம் | (C) | 5 | 4 | 1 | 2 | 3 |
| d) Treasury | -4) புணர்ச்சி | (D) | 5 | 4 | 6 | 3 | 2 |
| e) Gazette | -5) ஒழுக்கவியல் | | | | | | |
| | -6) கல்வெட்டியல் | | | | | | |

35. நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்.

இத்தொடரைப் பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக.

(A) நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்லமாட்டேன்.

(B) நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் சென்று வருவேன்.

(C) நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்லாமல் இரேன்.

(D) நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வது இல்லை.

36. ‘ புரட்சிக்கவி ’ என்ற காவியம் இயற்றப்பட்ட ஆண்டு.

(A) 1932 (B) 1935 (C) 1937 (D) 1939

37. தவறானது எது?

(A) பெற்றேன் - பெற்று (B) மருண்டனென் - மருள்

(C) தணிந்தது - தணி (D) முனிவிலர் - முனி

38. பொருத்துக.

| | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|
| a) புறவு | -1) வேட்கை | (A) | 4 | 1 | 5 | 2 | 3 |
| b) பூட்கை | -2) புகழ் | (B) | 3 | 2 | 1 | 5 | 4 |
| c) தாமம் | -3) சிங்கம் | (C) | 5 | 3 | 2 | 4 | 1 |
| d) நயம் | -4) மிகுதி | (D) | 5 | 3 | 2 | 1 | 4 |
| e) வயம் | -5) முல்லைநிலம் | | | | | | |

39. சொற்பொருள் காண்க.

எல்லி – கால்

(A) சூரியன் - காற்று

(B) வெட்கம் - உறுப்பு

(C) பயிர் - பகுதி

(D) மலை - கடல்

40. உவமைத் தொடர்களின் பொருள்களுள் தவறானது எது?

(A) இஞ்சி தின்ற குரங்கு போல - விழித்தல்

(B) கயிறற்ற பட்டம் போல - வலுவிழந்து

(C) கல்மேல் எழுத்து போல - அழியாமல்

(D) பசுமரத்தாணி போல - எளிதாக.

41. சந்திப்பிழையுற்ற சொற்றொடரை தேர்க.

1. வளவன் போருக்குச் செல்ல ஈட்டி கொண்டு வந்தான்

2. மகிழன் வெளிநாட்டிலிருந்து பொருளீட்டுக் கொண்டு வந்தான்

3. இனியன் வேலைக்கு மண்வெட்டி கொண்டு சென்றான்

4. எழிலன் பள்ளத்தை ஒப்புரவு செய்ய மண்வெட்டிக் கொண்டு சென்றான்

(A) 1,2 (B) 3 , 4 (C) 1 , 3 (D) எதுவுமில்லை

42. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a) மூங்கில் | -1) கீரை | (A) | 4 | 1 | 2 | 3 |
| b) முளை | -2) தழை | (B) | 4 | 3 | 2 | 1 |
| c) வேப்பம் | -3) கதிர் | (C) | 3 | 4 | 1 | 2 |
| d) வரகு | -4) இலை | (D) | 4 | 1 | 3 | 2 |

43. 'விண்டோஸ்' கலைச்சொல் தருக

(A) தொடுதிரை (B) தேடுபொறி (C) வான்உலவி (D) பலகணி

44. தவறான கலைச் சொல்லைத் தேர்க

(A) Phonetics - ஒலிப்பியல் (B) Syntax -தொடரியல்

(C) Cold Storage -பதனக்காப்பறை (D) Copy right-காப்புரிமை

45. 'ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்' என்ற செய்யுளடி இடம் பெற்ற நூல்?

(A) மூதுரை (B) பழமொழி நானூறு (C) ஏலாதி (D) திருக்குறள்

46. இரு பொருள் கண்டறிக - கடை

(A) உலகம், வனம் (B) கடினம் - உடை (C) கருவி, கயிறு (D) முடிவு - அங்காடி

47. சரியான தொடர் எது என்பதைக் கண்டறிக

(A) ஒருவகைப் பறவை வலசையின்போது வேறுவகைப் பறவையாக தோன்றும் உருமாறி

(B) வலசையின் போது ஒரு வகைப்பறவை வேறுவகைப் பறவையாக உருமாறித் தோன்றும்

(C) வலசையின் போது வேறுவகைப் பறவையாக உருமாறித்தோன்றும் ஒருவகைப்பறவை

(D) ஒருவகைப்பறவை வேறுவகைப் பறவையாக உருமாறித்தோன்றும் வலசையின் போது

48. பிறமொழி கலவாத தொடரைத் தேர்க

(A) காலிங்பெல்லை அழுத்தினான் குமரன்

(B) இன்று பல்வேறு துறைகளிலும் ரோபோ பயன்பாட்டில் உள்ளது

(C) கணினித்துறையில் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள்

(D) மனிதர்களின் வேலைகளை எளிதாக்க மிஷின்கள் பயன்படுகின்றன

49. பொருத்தமான அடியைத் தேர்க

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நால்நாழி - தோழி
நிதியுங் கணவனும் நேர்படினும் தந்தம்
-------- -------- -------

(A) அம்மருந்து போல்வாரு முண்டு (B) விதியின் பயனே பயன்

(C) ஒட்டி யுறுவார் உறவு (D) முற்பருவத்திற்கு செய்த வினை

50. பொருள் அறிக 'பொறையுடைமை'

(A) பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்

(B) நற்பண்புகள் உடையவரோடு நட்பு கொள்ளுதல்

(C) எல்லாரையும் சமமாகப் பேணுதல்

(D) பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்

51. "திருநின்றவூர்" எனும் ஊர்ப்பெயரின் மரூஉப் பெயரைக் கண்டறிக

(A) திருவூர் (B) தின்னனூர் (C) நின்றவூர் (D) தேரூர்

52. தொகைச் சொற்களில் பொருந்தாத ஒன்றைத் தேர்க

(A) முப்பகை – காமம், வெகுளி, மயக்கம்

(B) முத்தேன் – கொம்புத்தேன், மலைத்தேன், கொசுத்தேன்

(C) முந்நீர் – ஆற்றுநீர், ஏரி நீர், கடல்நீர்

(D) மூவிடம் – தன்மை, முன்னிலை, படர்க்கை

53. எவை நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் ஆகும் என வள்ளுவர் குறிப்பிடுவது எது?

(A) பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் பேசுதல்

(B) பொறாமை, சினம், உள்ளக் குற்றம், இன்னாச்சொல்

(C) அச்சம், மடம், பேராசை, சினம்

(D) சினம், கடுஞ்சொல் பேசுதல், நாணம், மடம்

54. பிழைத்திருத்துக

(A) ஓர் தெய்வீக காலைப்பொழுது
(B) ஓர் ஊரில் ஓர் விவசாயி இருந்தார்
(C) கல்வி ஒரு அணிகலன்
(D) ஒரு நாள் சந்திரன் கோவிலுக்குச் சென்றான்

55. தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் தாராபாரதி குறிப்பிடும் நூல் எது?

(A) திருக்குறள் (B) கம்பராமாயணம் (C) திரிகடுகம் (D) திருவாசகம்

56. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) Proposal | - | 1) சம்பளப்பட்டியல் | (A) | 3 | 5 | 2 | 1 | 4 |
| b) Stapler | - | 2) விசாரணை | (B) | 4 | 5 | 3 | 2 | 1 |
| c) Hearing | - | 3) கருத்துரு | (C) | 3 | 4 | 5 | 1 | 2 |
| d) Pay bill | - | 4) பற்றுச் சீட்டு | (D) | 2 | 5 | 4 | 1 | 3 |
| e) Receipt | - | 5) கம்பி தைப்பு கருவி | | | | | | |

57. சரியானக் கூற்றைத் தேர்க.

1. சொல்லின் உள்ளேயே இருந்து சுட்டுப் பொருளைத் தருவது சேய்மைச் சுட்டு ஆகும்

2. அம்மரம், இவ்வீடு ஆகியவை சுட்டுத்திரிபுக்கான உதாரணங்கள் ஆகும்

3. எது, யார், ஏன் இச்சொற்கள் அகவினா சொற்கள் ஆகும்

(A) 1 மட்டும் (B) 1, 2 மட்டும் (C) 3 மட்டும் (D) 1, 3 மட்டும்

58. கூற்றுகளை ஆராய்க

கூற்று 1: திராவிட நாட்டின் வானம்பாடி என்று பாராட்டப் பெற்றவர் துரைராசு ஆவார்

கூற்று 2: தமிழக அரசின் பரிசைப் பெற்ற முடியரசனின் காவியம் பூங்கொடி ஆகும்

(A) 1 மட்டும் சரி (B) 2 மட்டும் சரி (C) 1, 2 சரி (D) 1,2 தவறு

59. துன்பத்தை எவ்வாறு வெல்ல வேண்டும் என்று திருவள்ளுவர் நெறிப்படுத்துகிறார்?

(A) அப்படியே ஏற்றுக்கொள்ளுதல்
(B) எதிர்த்துப் போராடுதல்
(C) துன்பத்திற்கு துன்பம் கொடுத்தல்
(D) துன்பத்தின் போது வருந்துதல்

60. தவறானக் கூற்றைத் தேர்க

(A) நாமக்கல் கவிஞர் காந்தியக் கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்

(B) தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர் வெ.இராமலிங்கனார்

(C) திருமலர், இசைமலர், சமுதாய மலர், பல்சுவை மலர் போன்றவை நாமக்கல் கவிஞரின் கவிதைத் தொகுப்புகள் ஆகும்

(D) எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் என்பது நாமக்கல் கவிஞரின் பொன்மொழிகளில் ஒன்றாகும்

61. பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு எதைப் போன்றது?

(A) அகநக நட்பது போன்றது (B) நவில்தொறும் நூல்நயம் போன்றது

(C) பிறரின் பொருளுக்கு ஆசைப்படுதல் போன்றது (D) கடுத்து காட்டும் முகம் போன்றது

62. வேறுபட்ட ஒன்றைத் தேர்க

(A) புணை (B) மிதவை (C) தெப்பம் (D) வங்கம்

63. “தா” என்பதன் வினையாலணையும் பெயர் யாது?

(A) தந்தான் (B) தந்து (C) தந்த (D) தந்தவர்

64. “பதி” என்ற வேர்ச்சொல்லின் வினையெச்சம் எது?

(A) பதிந்த (B) பதித்த (C) பதித்து (D) பதியா

65. பின்வருவனவற்றுள் வடசொற்கள் எவை?

(A) அம்பி, நாவாய் (B) இரயில், சன்னல்

(C) கமலம், சக்கரம் (D) சாற்றினான், உறுபயன்

66. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) கா | - | 1) ஒழுக்கம் | (A) | 2 | 3 | 1 | 5 | 4 |
| b) கூ | - | 2) சோலை | (B) | 3 | 1 | 5 | 2 | 4 |
| c) கை | - | 3) பூமி | (C) | 5 | 3 | 1 | 2 | 4 |
| d) ஐ | - | 4) மலர் | (D) | 4 | 3 | 5 | 1 | 2 |
| e) வீ | - | 5) தலைவன் | | | | | | |

67. இருபொருள் தருக ‘ தாரணி’

(A) அமைதி, சிறப்பு (B) கருணை, உலகம் (C) வையம், உலகம் (D) சிறப்பு, உலகம்

68. “பாரி மடமகள் பாண்மகற்கு- நீர் உலையுள்

பொன் திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்” - செய்யுளடி இடம் பெற்ற நூல்

(A) பழமொழி நானூறு (B) ஏலாதி

(C) முதுமொழிக்காஞ்சி (D) நாலடியார்

69. ‘நான் நாளை மதுரை செல்கிறேன்’ - இது எவ்வகைத் தொடர்?

(A) வினாத் தொடர் (B) செய்தித்தொடர் (C) கலவைத் தொடர் (D) கட்டளைத் தொடர்

70. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) Civilization - | 1) நீர்ப்பாசனம் | (A) | | 3 | 4 | 1 | 5 | 2 |
| b) Cultivation - | 2) நாட்டுப் புறவியல் | (B) | | 5 | 4 | 1 | 2 | 3 |
| c) Irrigation - | 3) உழவியல் | (C) | | 4 | 5 | 1 | 3 | 2 |
| d) Folklore - | 4) பயிரிடுதல் | (D) | | 3 | 4 | 5 | 1 | 2 |
| e) Agronomy - | 5) நாகரிகம் | | | | | | | |

71. உவமையால் விளக்கப் பெறும் பொருத்தமான பொருளைத் தேர்ந்தெழுதுதல்

“துஞ்சுபுலி இடறிய சிதடன் போல....”

(A) துணிதல் (B) அறிதல் (C) அறியாமை (D) ஆணவம்

72. பொருந்தாதவற்றைக் கண்டறிக

(A) தோசை வைக்கப்பட்டது - செய்வினைத் தொடர்

(B) அப்துல் நேற்று வந்தான் - தன்வினைத் தொடர்

(C) கவிதா உரை படித்தாள் - செய்வினைத் தொடர்

(D) கோவலன் கொலையுண்டான் - செயப்பாட்டு வினைத்தொடர்

73. பிறவினைச் சொற்களைத் தேர்க

1. உருட்டினான் 2. பயின்றான் 3. பயிற்றுவித்தான் 4. ஆடினாள்

(A) 1, 3 (B) 1, 4 (C) 1, 2 (D) 3, 4

74. ‘எதையும் நன்கு ஆராய்ந்து ஒருபக்கம் சாயாது நடுவுநிலையில் நின்று நடத்துவதே சிறந்த ஆட்சியாகும்’ என்பது எக்குறள் வழி வள்ளுவரால் கூறப்பட்டது?

(A) இறைகடியான் என்று உரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்

(B) தக்காங்கு நாடித் தலைசெல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து

(C) ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை

(D) இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்

75. சரியான இணைச்சொல்லை இட்டு நிரப்புக

ஆற்று வெள்ளம் -------- பாராமல் ஓடியது

(A) ஈடுஇணை (B) இரவு பகல் (C) போற்றிப் புகழப்பட (D) மேடு பள்ளம்

76. பொருள் அறிக, ‘பழவேய்’

(A) பொன் வண்ண நீர்நிலை (B) மதயானைகள்

(C) இசைக்கருவி (D) முதிர்ந்த மூங்கில்

77. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) நடந்து | - | 1) முற்றெச்சம் | (A) | 4 | 3 | 2 | 1 |
| b) பேசிய | - | 2) குறிப்புப் பெயரெச்சம் | (B) | 3 | 4 | 1 | 2 |
| c) பெரிய | - | 3) பெயரெச்சம் | (C) | 4 | 1 | 2 | 3 |
| d) எடுத்தனன் உண்டான் | - | 4) வினையெச்சம் | (D) | 2 | 3 | 1 | 4 |

78. பொருந்தாத சொல்லையும் பொருளையும் தேர்க

(A) செறாஅமை – வெறுக்காமை (B) நோன்றல் – பொறுத்தல்

(C) போற்றார் – அறிவற்றார் (D) மறாஅமை – மறவாமை

79. பொருள் வேறுபாடு உணர்க பொருந்தாததைத் தேர்க

(A) விளை – உண்டாக்குதல் (B) ஏறி – நீர்நிலை

(C) இளை – மெலிந்து போதல் (D) கூறை – புடவை

80. சரியான நிறுத்தற்குறியுடைய வாக்கியத்தை கண்டறிக

(A) முக்கனி : மா, பலா, வாழை. (B) முத்தமிழ் – இயல் இசை நாடகம்

(C) முச்சங்கம் :- முதல், கடை, இடை (D) ‘ மூவேந்தர் ’ : சேர! சோழ! பாண்டியர்

81. பொருத்துக

| | | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|---|
| a) உவப்ப | - | 1) ஏர் | (A) | 4 | 2 | 3 | 1 |
| b) மாடு | - | 2) நஞ்சு | (B) | 4 | 3 | 1 | 2 |
| c) மேழி | - | 3) செல்வம் | (C) | 2 | 4 | 1 | 3 |
| d) ஆலாலம் | - | 4) மகிழ | (D) | 2 | 1 | 4 | 3 |

82. தவறான இணையைக் காண்க?

(A) ஏர் -அழகு (B) ஒரால்-நீக்குதல் (C) ஏறு-காளை (D) ஏதல்-இன்பம்

83. சரியான இணையைக் காண்க

(A) கல்லி-தோண்டி (B) கள்ளி-இளம்பெண் (C) களி-துன்பம் (D) கலி – மகிழ்ச்சி

84. “குலவு” என்ற சொல்லின் பொருள் யாது?

(A) ஒலி (B) விளங்கும் (C) ஒற்றுமை (D) குழந்தை

85. பொருத்துக

| | | | | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|---|---|---|
| a) இருசு | - | 1) பாம்பு | (A) | 5 | 3 | 1 | 2 | 4 |
| b) இரிய | - | 2) மூங்கில் | (B) | 5 | 1 | 3 | 4 | 2 |
| c) ஏவம் | - | 3) அழகிய | (C) | 2 | 4 | 5 | 1 | 3 |
| d) அரா | - | 4) ஓட | (D) | 3 | 4 | 5 | 1 | 2 |
| e) அம் | - | 5) குற்றம் | | | | | | |

86. “அயில்” என்னும் சொல்லிற்கு பொருந்தாத சொல்லை காண்க

(A) கூர்மை (B) கண் (C) வேல் (D) அலகு

87. தவறான இணையைக் காண்க

(A) அரணியம் – காடு (B) இகுளை – தோழி

(C) அமர்ந்து – அருகில் (D) ஆலித்தல் – தாவியோடுதல்

88. “கூற்று” என்ற சொல்லின் பொருள் காண்க

(A) விளக்கம் (B) எமன் (C) பொருள் (D) உண்மை

89. “பதுமை” என்ற சொல்லின் பொருள் யாது?

(A) பெண் (B) உருவம் (C) அழகு (D) அடக்கம்

90. பொருத்துக

a) அங்குலி - 1) பிறவி
b) அசு - 2) விரல்
c) அணிமை - 3) கிளி
d) அந்திகை - 4) சகதி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

91. “ Programmer ” என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் யாது?

(A) நிரல் (B) நிரலர் (C) செயல்பாடு (D) தரவு

92. பொருத்துக

a) Thorns - 1) அகழி
b) Mint - 2) பின்னுகொடி
c) Moat - 3) நாணயச் சாலை
d) Twiner - 4) முள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

93. தவறான இணையைக் காண்க

(A) Molecules - மோல் விதி (B) Diver - மூழ்குபவர்

(C) Deity - தெய்வம் (D) Virtuous - நல்லொழுக்கம்

94. “ Settlement” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) முடிவுறுதல் (B) குடியிருப்புகள் (C) கடன் அடைத்தல் (D) நிலை நிறுத்தல்

95. “ Collapse ” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) சரிவு (B) குழப்பம் (C) கெட்டுப்போதல் (D) தடுமாற்றம்

96. பொருத்துக

a) Matter - 1) பல் தட்டை
b) Engrave - 2) பொறிக்கப்பட்ட
c) Plaque - 3) எதிர்மின் அயனி
d) Anion - 4) பருப்பொருள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

97. “Taxonomy” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ்ச்சொல் காண்க

(A) தடுப்பூசி (B) வகைப்பாட்டியல் (C) வகைப்பாடு (D) பாகுதன்மை

98. சரியான இணையைக் காண்க

(A) Mantle-கருவம் (B) Tributary-துணை ஆறு

(C) Plunder-கொள்முதல் (D) Ferocious-சதிகாரர்கள்

99. “Salvation” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு பொருந்தாத தமிழ்ச்சொல்லை காண்க

(A) முக்தி (B) விமோசனம் (C) இரட்சிப்பு (D) பாதுகாத்தல்

100. “Sanctum” என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையான தமிழ் சொல் காண்க

(A) அவதாரம் (B) சகாப்தம் (C) வேறுபாடு (D) கருவறை